# விசுவாசத்துரோகம் யாவை?

உலகக் கண்ணோட்டம் பற்றிய கேள்விகள்

விசுவாசத்துரோகம் என்னும் சொல் கிரேக்க வார்த்தையான அப்போஸ்டாசியா என்பதிலிருந்து, "ஒரு நிறுவப்பட்ட அமைப்பு அல்லது அதிகாரத்தை மீறுதல்; ஒரு கலகம்; ஒரு கைவிடுதல் அல்லது விசுவாச மீறல்" என்கிற அர்த்தத்தில் வருகிறது. முதல் நூற்றாண்டு உலகில், விசுவாசத்துரோகம் என்பது அரசியல் கிளர்ச்சி அல்லது விலகிச் செல்லுதல் என்பதற்கான தொழில்நுட்பச் சொல்லாக இருந்தது. முதல் நூற்றாண்டைப் போலவே, ஆவிக்குரியத் துரோகம் இன்று கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை அச்சுறுத்துகிறது.

நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் அந்தியோக்கியாவில் பயிற்றுவிக்கப்பட்ட எகிப்தினுடைய அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பிஷப் ஏரியஸ் (கி.பி. 250-336) போன்றவர்களைப் பற்றி வேதாகமம் எச்சரிக்கிறது. கி.பி 318 இல், அலெக்ஸாண்டிரியாவின் பிஷப் அலெக்சாண்டர் என்பவர் சபெல்லியனிசத்திற்கு சோரம்போனதாக ஏரியஸ் குற்றம் சாட்டினார், அதாவது அது தேவனானவர் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோராக பல்வேறு காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள் அல்லது முறைகள் என்று

வலியுறுத்தியது ஒரு தவறான போதனை எனக் கூறினார். ஏரியஸ் தேவனுடைய ஒருமையை வலியுறுத்துவதில் உறுதியாக இருந்தார்; இருப்பினும், தேவனுடைய இயல்பைப் பற்றிய போதனையில் அவர் வெகுதூரம் சென்றார். ஏரியஸ் திரித்துவத்தை மறுதலித்து, பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே ஒரு பொருத்தமற்ற வித்தியாசமான நிலையில் தோன்றியதை அறிமுகப்படுத்தினார்.

ஏரியஸ், இயேசு பிதாவைப் போல ஹோமோஊசியோஸ் ("அதே சாராம்சம்") அல்ல, மாறாக ஹோமோய்ஊசியோஸ் ("ஒத்த சாராம்சம்") என்று வாதிட்டார். ஒரே ஒரு கிரேக்க எழுத்து—அயோட்டா (ι)—இரண்டையும் பிரித்தது. ஏரியஸ் தனது நிலையை இவ்வாறு விவரித்தார்: “பிதா குமாரனுக்கு முன்பே இருந்தார். குமாரன் இல்லாத ஒரு காலம் இருந்தது. எனவே, குமாரன் பிதாவால் படைக்கப்பட்டார். ஆகையால், குமாரன் எல்லா உயிரினங்களிலும் உயர்ந்தவராக இருந்தாலும், அவர் தேவனுடைய அதே சாராம்சத்தில் இல்லை.

ஏரியஸ் புமிகவும் த்திசாலி மற்றும் ஜனங்களைத் தன் பக்கம் இழுக்க தன்னால் முடிந்த அனைத்தையும் அவர் செய்தார், அவர் தனது இறையியலைக் கற்பிக்கும் சிறிய பாடல்களை

இயற்றினார், அதைக் கேட்கும் அனைவருக்கும் கற்பிக்க முயன்றார். அவரது கவர்ந்திழுக்கும் இயல்பு, துறவரம் மற்றும் ஒரு போதகராக மரியாதைக்குரிய நிலை ஆகியவை அவரது நோக்கத்திற்கு பெரிதும் பங்களித்தன.

விசுவாசத்துரோகத்தைப் பொறுத்தவரை, எல்லா கிறிஸ்தவர்களும் இரண்டு முக்கியமான விஷயங்களைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது: (1) விசுவாசத்துரோகம் மற்றும் விசுவாசத்துரோகப் போதகர்களை எவ்வாறு அங்கீகரிப்பது, (2) விசுவாசத்துரோகப் போதனை ஏன் மிகவும் கொடியது.

விசுவாசத் துரோகத்தின் வடிவங்கள்

விசுவாசத்துரோகத்தை முழுமையாகக் கண்டறிந்து எதிர்த்துப் போராட, கிறிஸ்தவர்கள் அதன் பல்வேறு வடிவங்களையும் அதன் கோட்பாடுகள் மற்றும் போதகர்களின் குணாதிசயங்களையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசத்துரோகத்தின் வடிவங்களைப் பொறுத்தவரை, இரண்டு முக்கிய வகைகள் உள்ளன: (1) வேதாகமத்தின் முக்கியமான மற்றும் மெய்யானப் போதனைகளிலிருந்து "மெய்யானக்" கிறிஸ்தவப் போதனைகள் என்று கூறுக்கொள்ளும் துர்உபதேசங்களுக்குள் விழுந்து போகுதல்,

மற்றும் (2) கிறிஸ்தவ விசுவாசத்தை முழுவதுமாக கைவிடுதல், இது கிறிஸ்துவை முழுமையாக மறுதலித்து கைவிடுவதில் முடிகிறது.

ஏரியஸ் விசுவாசத்துரோகத்தின் முதல் வடிவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்—-முக்கிய கிறிஸ்தவ சத்தியங்களை (கிறிஸ்துவின் தெய்வீகம் போன்றவை) மறுப்பது, இது விசுவாசத்தில் இருந்து முழுவதுமாக விலகிச் செல்ல வழிவகுக்கிறது, இது விசுவாசத்துரோகத்தின் இரண்டாவது வடிவமாகும். இரண்டாவது வடிவம் எப்போதுமே முதலில் இருந்து தொடங்குகிறது. ஒரு சமய மரபின் நம்பிக்கை என்பது ஒரு சமய மரபின் போதனையாக மாறுகிறது, அது ஒரு நபரின் விசுவாசத்தின் அனைத்து அம்சங்களையும் மாசுபடுத்தும் வரை பிளவுபடுகிறது மற்றும் வளர்கிறது, பின்னர் சாத்தானின் இறுதி இலக்கு அடையப்படுகிறது, இது கிறிஸ்தவத்திலிருந்து முற்றிலும் வீழ்ச்சியடைதலாகும்.

டேனியல் டென்னெட் மற்றும் லிண்டா லாஸ்கோலா ஆகியோரால் 2010 ஆம் ஆண்டு "விசுவாசிகள் அல்லாத பிரசங்கிகள்" என்று அழைக்கப்பட்ட ஆய்வு நடத்தப்பட்டது. டெனட் மற்றும் லாஸ்கோலாவின் படைப்புகள் ஐந்து

வெவ்வேறு பிரசங்கிகளை விவரிக்கிறது, அவர்கள் காலப்போக்கில் கிறிஸ்தவத்தைப் பற்றிய சமய மரபுப் போதனைகளை முன்வைத்து ஏற்றுக்கொண்டனர், இப்போது விசுவாசத்திலிருந்து முற்றிலும் விலகிச்சென்றுவிட்டனர். இந்த போதகர்கள் எல்லாமே தேவன் என்கிற விசுவாசக் கோட்பாட்டை ஆமோதிப்பவர்கள் அல்லது இரகசியமான நாத்திகர்கள். ஆய்வில் எடுத்துக்காட்டப்பட்ட மிகவும் குழப்பமான உண்மை என்னவென்றால், இந்த பிரசங்கிகள் கிறிஸ்தவ திருச்சபைகளின் போதகர்களாக தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள், அவர்களின் திருச்சபைகள் தங்கள் தலைவரின் உண்மையான ஆவிக்குரிய நிலையைப் பற்றி அறியவில்லை.

விசுவாசத்துரோகம் மற்றும் விசுவாசத்துரோகிகளின் பண்புகள்

யூதா இயேசுவின் ஒன்றுவிட்ட உடன் பிறந்த சகோதரர் மற்றும் ஆரம்பகால திருச்சபையில் ஒரு தலைவராக இருந்தார். அவருடைய புதிய ஏற்பாட்டு நிருபத்தில், விசுவாசத்துரோகத்தை எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது என்பதை அவர் கோடிட்டுக் காட்டுகிறார், மேலும் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ளவர்களை விசுவாசத்திற்காக தைரியமாக போராடும்படி கடுமையாக

வலியுறுத்துகிறார் (யூதா 1:3). "தைரியமாய்ப் போராடவேண்டும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ஒரு கூட்டு வினைச்சொல் ஆகும், அதிலிருந்து நாம் அகோனைஸ் என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இது நிகழ்கால வினையச்சம் வடிவத்தில் உள்ளது, அதாவது போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தவறான போதனைகளுக்கு எதிராக ஒரு நிலையான போராட்டம் இருந்துகொண்டே இருக்கும் என்றும், கிறிஸ்தவர்கள் அதை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், நாம் ஈடுபடும் போராட்டத்தில் நாம் "பெரும் மன வேதனைப்படுகிறோம்" என்றும் யூதா கூறுகிறார். மேலும், திருச்சபைத் தலைவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்த போராட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை யூதா தெளிவுபடுத்துகிறார், எனவே அனைத்து விசுவாசிகளும் தங்கள் பகுத்தறியும் திறனைக் கூர்மைப்படுத்துவது மிகவும் முக்கியமானது, இதனால் அவர்கள் மத்தியில் விசுவாசத்துரோகத்தை அடையாளம் கண்டுகொண்டு தடுக்க முடியும்.

விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடும்படி தன் வாசகர்களை ஊக்கப்படுத்திய பிறகு, யூதா அதற்கான

காரணத்தை எடுத்துரைக்கிறார்: “ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது” (யூதா 1:4). இந்த ஒரு வசனத்தில், யூதா கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்துரோகம் மற்றும் விசுவாசத்துரோகப் போதகர்களின் மூன்று பண்புகளை வழங்குகிறார்:

முதலாவதாக, விசுவாசதுரோகம் அடையாளம் கொண்டுகொள்ள முடியாதபடிக்கு நுட்பமானதாக இருக்கலாம் என்று யூதா கூறுகிறார். விசுவாசத்துரோகிகள் திருச்சபைக்குள் "பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்". வேதாகமத்திற்கு புறம்பான கிரேக்க மொழியில், யூதா பயன்படுத்தும் வார்த்தை, புத்திசாலித்தனமான வாதத்தின் மூலம் நீதிமன்ற அறை அதிகாரிகளின் மனதில் ஊடுருவி அவர்களின் சிந்தனையை சிதைக்கும் ஒரு வழக்கறிஞரின் தந்திரமான தந்திரத்தை இது விவரிக்கிறது. இந்த வார்த்தையின் நேரடி அர்த்தம் “பக்கவழியாய் நழுவுதல்;

திருட்டுத்தனமாக உள்ளே வருதல்; உள்ளே பதுங்கிக்கொள்." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், விசுவாசத்துரோகம் வெளிப்படையான மற்றும் எளிதில் கண்டறியக்கூடிய முறையில் தொடங்குவது அரிது என்று யூதா கூறுகிறார். மாறாக, இது ஏரியஸின் கோட்பாட்டைப் போலவே தோன்றுகிறது—அயோட்டா என்ற ஒற்றை எழுத்து மட்டுமே தவறான போதனையை சத்தியத்திலிருந்து வேறுபடுத்துகிறது.

விசுவாசத்துரோகத்தின் இந்த அம்சத்தையும் அதன் அடிப்படை ஆபத்தையும் விவரித்து, ஏ.டபிள்யூ. டோசர் எழுதினார், “சத்தியத்தைப் பின்பற்றுவதில் மிகவும் திறமையானது தவறு ஆகும், இவை இரண்டும் தொடர்ந்து ஒன்றுக்கொன்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. காயீன் யார், ஆபேல் யார் என்பதை அறிய இந்த நாட்களில் கூர்மையான பார்வை தேவைப்படுகிறது.” அப்போஸ்தலனாகிய பவுல், விசுவாசத்துரோகிகளின் வெளிப்புறமாகப் பிரியமான நடத்தை மற்றும் அவர்களின் போதனைகளைப் பற்றியும் பேசுகிறார்: “அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்

தரித்துக்கொள்வானே” (2 கொரிந்தியர் 11:13-14). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், விசுவாசத்துரோகிகள் வெளியில் மோசமாகத் தோற்றமளிப்பதைத் தேடாதீர்கள் அல்லது அவர்களின் போதனையின் தொடக்கத்தில் மதங்களுக்கு எதிரான வியத்தகு வார்த்தைகளைப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். சத்தியத்தை முழுவதுமாக மறுதலிப்பதற்குப் பதிலாக, விசுவாசத்துரோகிகள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு அதைத் திரிப்பார்கள், ஆனால், போதகர் ஆர்.சி. லென்ஸ்கி குறிப்பிட்டது போல, “தீமையின் மோசமான வடிவங்கள் சத்தியத்தின் தவறான போக்கில் அடங்கியுள்ளன.”

இரண்டாவதாக, விசுவாசத்துரோகிகளை "பக்தியற்றவர்கள்" என்றும், தேவனுடைய கிருபையை காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி அப்படிச் செய்வதற்கான உரிமமாகப் பயன்படுத்துபவர்கள் என்றும் யூதா விவரிக்கிறார். “பக்தியற்றவர்” என்பதில் தொடங்கி, விசுவாசத்துரோகிகளின் பதினெட்டு பொருந்தாத பண்புகளை யூதா விவரிக்கிறார்: அவர்கள் தேவபக்தியற்றவர்கள் (யூதா 1:4), ஒழுக்க ரீதியாக காமவிகாரத்துக்கேதுவானவர்கள் (வசனம் 4), கிறிஸ்துவை மறுதலிப்பவர்கள் (வசனம் 4), மாம்சத்தை அசுசிப்படுத்துபவர்கள் (வசனம் 8), கலகக்காரர்கள் (வசனம்

8), தேவதூதர்களை தூஷணமாய்க் குற்றப்படுத்துகிறவர்கள் (வசனம் 8), தேவனைக் குறித்து அறியாதவர்கள் (வசனம் 8), தவறான தரிசனங்களை அறிவிப்பவர்கள் (வசனம் 10), தங்களையேக் கெடுத்துக்கொள்ளுகிறவர்கள் (வசனம் 10), முறுமுறுக்கிறவர்கள் (வசனம் 16), முறையிடுகிறவர்கள் (வசனம் 16), தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்கள் (வசனம் 16), இறுமாப்பானவைகளைப் பேசுகிறவர்கள்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்கிறவர்கள் (வசனம் 16), தேவனை பரியாசம்பண்ணுகிறவர்கள் (வசனம் 18), பிரிவினையை ஏற்படுத்துபவர்கள் (வசனம் 19), ஜென்மசுபாவமுள்ளவர்கள் (வசனம் 19), இறுதியாக (ஆச்சரியப்படுவதற்கில்லை), ஆவியில்லாதவர்கள் / இரட்சிக்கப்படாதவர்கள் (வசனம் 19).

மூன்றாவதாக, விசுவாசத்துரோகிகள் “நம்முடைய ஒரே எஜமானரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள்” என்று யூதா கூறுகிறார். விசுவாசத்துரோகிகள் இதை எப்படி செய்கிறார்கள்? பவுல் தீத்துவுக்கு எழுதிய கடிதத்தில் நமக்குச் சொல்லுகிறார், “சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும்

மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்" (தீத்து 1:15-16). தங்கள் அநீதியான நடத்தை மூலம், விசுவாசத்துரோகிகள் தங்கள் உண்மையான சுயத்தை வெளிக்காட்டுகிறார்கள். விசுவாசத்துரோகியைப் போலல்லாமல், ஒரு உண்மையான விசுவாசி என்பவர் பாவத்திலிருந்து கிறிஸ்துவில் நீதிக்கு விடுவிக்கப்பட்டு, பாவத்தில் தொடர மறுப்பவர் ஆவார் (ரோமர் 6:1-2).

முடிவாக, ஒரு விசுவாசத்துரோகியின் அடையாளம் என்னவென்றால், அவன் இறுதியில் விழுந்து, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திலிருந்தும் அவருடைய நீதியிலிருந்தும் விலகுகிறான். அப்போஸ்தலனாகிய யோவான் இது ஒரு தவறான விசுவாசியின் அடையாளமாக இருப்பதைக் குறிக்கிறது என்கிறார்: “அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும்

நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்” (1 யோவான் 2:19).

யோசனைகளுக்கு விளைவுகள் உண்டு

பிலேமோன் புத்தகத்தைத் தவிர ஒவ்வொரு ப0ுதிய ஏற்பாட்டு புத்தகத்திலும் தவறான போதனைகளைக் குறித்த எச்சரிக்கைகள் உள்ளன. இது ஏன்? யோசனைகள் விளைவுகளைக் கொண்டிருப்பதால். சரியான சிந்தனையும் அதன் பலனும் நன்மையை உருவாக்குகின்றன, அதேசமயம் தவறான சிந்தனையும் அதனுடன் இணைந்த செயலும் விரும்பத்தகாத தண்டனைகளை விளைவிக்கிறது. உதாரணமாக, 1970-களில் கம்போடிய கொலைக்களங்கள் ஜீன் பால் சார்த்தர் என்பவரின் நிர்மூலமாக்குதலின் உலகக் கண்ணோட்டம் மற்றும் அவரது போதனையின் விளைவாகும். கெமர் ரூஜின் தலைவரான போல் பாட், சார்த்தரின் தத்துவத்தை மக்களிடம் தெளிவாகவும் பயமுறுத்தும் விதமாகவும் வாழ்ந்து காட்டினார், இது இவ்விதமாக இந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டது: “உங்களை வைத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை. உங்களை அழிப்பதால் எந்த நஷ்டமுமில்லை”

சாத்தான் ஏதேன் தோட்டத்தில் இருந்த முதல் ஜோடிகளிடம் ஒரு வெளிப்புற ஆயுதம் அல்லது தெரியும் விதமான ஆயுதம் கொண்டு வரவில்லை; மாறாக, அவன் ஒரு யோசனையுடன் அவர்களிடம் வந்தான். ஆதாம் மற்றும் ஏவாளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த யோசனையே, அவர்களையும் மற்ற மனிதகுலத்தையும் கண்டனம் செய்தது, அதற்கான ஒரே தீர்வு தேவனுடைய குமாரனின் தியாக மரணம்.

பெரிய துக்ககரமான காரியம் என்னவென்றால், தெரிந்தோ தெரியாமலோ, நம்பிக்கைத் துரோக போதகர், சந்தேகத்திற்கு இடமில்லாத அவரைப் பின்பற்றுபவர்களை அழித்துவிடுகிறார். இயேசு தம் காலத்து மதத் தலைவர்களைப் பற்றி தம் சீடர்களிடம் பேசுகையில், “அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்” (மத்தேயு 15:14, வசனத்தில் வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). ஆபத்தானது, அழிவுக்குச் செல்வது கள்ளப்போதகர்கள் மட்டுமல்ல, அவர்களின் சீடர்களும் அவர்களைப் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்தவ தத்துவஞானி சோரன் கீர்கேகார்ட் இதை இவ்வாறு கூறினார்: "ஒரு முட்டாள், அவன் வழிதவறிச் செல்லும் போது, தன்னுடன்

பலரை அழைத்துச் செல்வது தோல்வியடைவதாக இதுவரை அறியப்படவில்லை."

முடிவுரை

கி.பி 325 இல், நைசியா கவுன்சில் முதன்மையாக ஏரியஸ் மற்றும் அவரது போதனையின் பிரச்சினையை கையாளுவதற்காக எடுத்தது. ஏரியஸ் அதிர்ச்சியுரத்தக்க நிலையில், இறுதி முடிவு அவரது வெளியேற்றம் மற்றும் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை உறுதிப்படுத்தும் நைசின் விசுவாச அறிக்கை: “நாங்கள் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம், சர்வவல்லமையுள்ள பிதா, எல்லாவற்றையும் காண்கின்ற மற்றும் காணப்படாதவைகள் என அனைத்தையும் சிருஷ்டித்தவர்; மற்றும் ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய குமாரன், அவருடைய பிதாவின் ஒரே-பேறானவர், பிதாவின் பொருள், தேவனுடைய தேவன், ஒளியின் ஒளி, மிகவும் தேவனுடைய தேவனானவர், உருவாக்கப்படாதவர், பிதாவின் ஒரே பொருளில் உள்ளவர்."

ஏரியஸ் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இறந்திருக்கலாம், ஆனால் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகள் இன்றுவரை கிறிஸ்துவின் உண்மையான சாரம்சம் மற்றும் ஆள்தன்மையை மறுக்கும் யேகோவாவின் சாட்சிகள் மற்றும் பிறர் போன்ற சமய

வழிபாட்டு முறைகளில் நம்முடன் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்து திரும்பி வரும் வரை மற்றும் ஒவ்வொரு கடைசி ஆவிக்குரிய எதிரியும் அகற்றப்படும் வரை, இது போன்ற களைகள் கோதுமை மணிகள் மத்தியில் இருக்கும் (மத்தேயு 13:24-30). உண்மையில், கிறிஸ்துவின் வருகை நெருங்கும்போது விசுவாசத்துரோகம் மோசமாகிவிடும் என்று வேதம் கூறுகிறது. "அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்" (மத்தேயு 24:10). பவுல் தெசலோனிக்கேயர்களிடம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக ஒரு பெரிய விசுவாசத்துரோகம் ஏற்படும் என்று கூறினார் (2 தெசலோனிக்கேயர் 2:3) மற்றும் இறுதிக் காலம் உபத்திரவங்கள் மற்றும் வெற்று மத சார்லட்டன்களால் வகைப்படுத்தப்படும்: "மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக...தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்க; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு” (2 தீமோத்தேயு 3:1-2, 5).

ஒவ்வொரு விசுவாசியும் பகுத்தறிவுக்காக ஜெபிப்பதும், விசுவாச துரோகத்தை எதிர்த்துப் போராடுவதும், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடவேண்டும் என்பது முன்னெப்போதையும் விட இப்போது மிகவும் முக்கியமானது ஆகும்.

---

மூலம் / Source: https://www.gotquestions.org/Tamil/Tamil-apostasy.html | English: https://www.gotquestions.org/apostasy.html

www.GotQuestions.org · https://www.gotquestions.org/Tamil · © Copyright Got Questions Ministries · questions@gotquestions.org